# அத்தியாயம் IV

# கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்

# அத்தியாயம் IV

# கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்

நிதி சார்ந்த துறை அளவிலான அறிக்கைகளும், தொடர்புடைய விதிகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றப்படுவதும் சிறப்பான நிர்வாகத்திற்கு கணிசமான அளவில் பங்களிக்கின்றன. இவ்வகையில், நிதி விதிகள், நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை பின்பற்றுவதும், அவ்வாறு பின்பற்றுதலின் நிலை குறித்து உரிய நேரத்தில் தரத்துடன் அறிக்கை அளித்தலும் சிறந்த நிர்வாகத்திற்கான தன்மைகளுள் ஒன்று. பின்பற்றுதல் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான அறிக்கைகள் பயனுள்ளவையாகவும் செயல்படுத்தும் வகையிலும் இருந்தால், நுணுக்கமான திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தல் உள்ளிட்ட அரசின் அடிப்படை தலைமை பொறுப்புகளை நிறைவேற்ற அரசுக்கு உதவும்.

மாநில அரசின் பல்வேறு அதிகார அமைப்புகளால் அளிக்கப்பட்ட கணக்குகளின் தரம் மற்றும் விதிக்கப்பட்ட நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைமைகளை பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் பின்பற்றாதது ஆகியவை மீதான குறிப்புகளை இந்த அத்தியாயம் வழங்குகிறது.

## அ. கணக்குகளை முழுமையாக்குவது தொடர்பான காண்புரைகள்

### 4.1 மாநில அரசின் கடன்கள் ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைக்கப்படவில்லை

மாநில அரசின் கடன்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 293 (1) பிரிவின்படி நிர்வகிக்கப்படுகின்றன. அரசு நிறுவனங்கள் /பெருநிறுவனங்கள்/ வாரியங்கள் மூலம் பெறப்பட்ட கடன்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளிக்கிறது. இந்த நிறுவனங்கள்/ பெருநிறுவனங்கள்/வாரியங்கள் மாநில வரவு–செலவு கணக்கிற்கு வெளியே திட்டமிடப்பட்ட பல்வேறு மாநில திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியை சந்தை கடனாக பெறுகின்றன. இந்தக் நிறுவனங்களின் கடன்கள் இறுதியில் மாநில அரசாங்கத்தின் பொறுப்புகளாக மாறி, 'வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்' என்று அழைக்கப்படுகிறது. வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் போக்கு 2018-19 முதல் 2022-23 வரையிலான விவரங்கள் **அட்டவணை 4.1**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4.1 - வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் நிறுவனம் வாரியான நிலை

(₹ கோடியில்)

| முகமையின் பெயர் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் | 514.54 | 463.09 | 411.63 | 373.03 | 308.71 |
| நீர் மற்றும் சுகாதாரம் திரட்டப்பட்ட நிதி – தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் | 254.13 | 237.45 | 220.77 | 239.17 | 380.14 |
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 5.79 | 3.24 | 1.59 | 0.45 | 0.00 |
| தமிழ்நாடு நீர்வள பாதுகாப்பு மற்றும் நதிகள் மீட்பு | 0.00 | 0.00 | 34.43 | 629.31 | 1,609.69 |
| **மொத்தம்** | **774.46** | **703.78** | **668.42** | **1,241.96** | **2,298.54** |

(ஆதாரம்: *நிதி ஆவணம் மற்றும் உரிய ஆண்டிற்கான நிதிக் கணக்குகள்*)

மாநிலத்தின் வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன் 2019-20 முதல் 2020-21 ஆண்டுகளில் ஓரளவு குறைந்து 2021-22 மற்றும் 2022-23 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது. 2022-23ம் ஆண்டில், அரசாங்கம் ₹1,184.69 கோடி கடனாகப் பெற்று வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களுக்க்கான வட்டி ₹128.11 கோடியைத் திருப்பிச் செலுத்தியது. (**பத்தி 2.6.1.1 அத்தியாயம் 2**)

வரவு–செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் மற்றும் அத்தகைய கடன்களை முழுமையாகச் செலுத்துவதற்கான அரசாங்கத்தின் பொறுப்புகள் கூடுவதால், குறிப்பாக தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக வருவாய் மற்றும் நிதிப்பற்றாக்குறையை தொடர்ந்து சந்தித்து வருகின்ற நிலைமையால், மாநிலத்தின் நிதி ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், அத்தகைய பொறுப்புகளை பட்ஜெட்டில் வெளியிடாமல் உருவாக்குவது கணக்குகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் முழுமை ஆகிய இரண்டிலும் கேள்விகளை எழுப்புகிறது.

## 4.2 வட்டி பெறும் வைப்புத்தொகைகள் தொடர்பான வட்டி பொறுப்புகளை தீர்வு செய்யாமை

கணக்கு தலைப்புகள் 8338 (உள்ளாட்சி நிதிகளின் வைப்புத்தொகைகள்) மற்றும் 8342 (பிற வைப்புத்தொகைகள்) ஆகியவற்றின் கீழ் பொறுப்புகளை எதிர்கொள்ள 2049-60-101 (வைப்புத்தொகைகள் மீதான வட்டி) என்ற பெருந்தலைப்பின் கீழ் வட்டி பெறும் வைப்புத்தொகைகளுக்கு வட்டி வழங்க நிதி ஒதுக்கி, அதனை செலுத்தும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

நிதி கணக்குகளின்படி, 2022-23ல் 8338 மற்றும் 8342 என்ற பெருந்தலைப்புகளின் கீழ் பொறுப்புகளை எதிர்கொள்ள, 2049-60-101 (வைப்புத்தொகைகள் மீதான வட்டி) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ₹139.53 கோடி வட்டி செலுத்தப்பட்டது; இது, பெருந்தலைப்பு 8338 மற்றும் 8342களில் உள்ள வைப்புகளில் (₹66,629.81 கோடி) 0.21 விழுக்காடு ஆகும். மேலும், கணக்குத் தலைப்பு '2049-60-101'ன் கீழ் ஒதுக்கப்பட்ட ₹29.09 கோடி முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டது. இதன் மூலம் இந்த வைப்புத் தொகைகளின் மீதான வட்டிப் பொறுப்புகளை தீர்ப்பது தள்ளிப்போகிறது. (**இணைப்பு 3.7**). வட்டிப் பொறுப்பைச் செலுத்தாததால் வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை அந்த அளவுக்குக் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

## 4.3 மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு நேரடியாக நிதி விடுவிப்பு


பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு கணிசமான நிதியை மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு[1] விடுவிக்கிறது. அவ்வாறான நிதி தொடர்பாக, கணக்குகளுக்கான தலைமை கட்டுப்பாட்டாளரின் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) இணைய தளத்தில் உள்ள விவரங்கள் நிதி கணக்குகள் – பகுதி IIன் இணைப்பு VIல் தரப்பட்டுள்ளன. இந்நிதிகள் மாநில வரவு – செலவு

1 மாநில திட்ட செயலாக்க முகமை என்பது ஏதேனும் ஒரு அமைப்பு/நிறுவனம் உள்ளடக்கிய மாநிலத்தில் குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்துவதற்காக இந்திய அரசிடமிருந்து நிதியைப் பெற மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா அமைப்பு.

**திட்டம்/மாநில கருவூல அமைப்பிற்கு விடுவிக்கப்படாததால், இவை பெறப்படுவதும் செலவிடப்படுவதும் நிதி கணக்குகளில் சேராது.**

**பல்வேறு மத்திய திட்டங்களை செயல்படுத்துவதற்காக** 2022-23**ம் ஆண்டில் மத்திய அரசு** ₹27,816.54 **கோடி தொகையை நேரடியாக மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு மாற்றம் செய்தது.**

**இந்திய அரசாங்கத்தின் தகவல்களின்படி, மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு** 2018-23 **காலகட்டத்தில் நேரடியாக நிதி வழங்கப்பட்டதன் போக்கு நடப்பாண்டில்** ₹4,660.32 **கோடி அளவிற்கு கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதை விளக்கப்படம் 4.1ல் காட்டப்பட்டுள்ளது.**




(ஆதாரம்: *உரிய ஆண்டிற்கான மாநில நிதிக் கணக்குகள்*)

2022-23**ம் ஆண்டில் தலா** ₹100 **கோடி அளவிற்கு மேலாக நிதி பெற்ற முகமைகளின் விவரங்கள் அட்டவணை 4.2ல் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை 4.2: ₹100 கோடி அளவிற்கு மேலான நிதியை மத்திய அரசிடமிருந்து நேரடியாக பெற்ற முகமைகள்**

| வ. எண் | மத்திய அரசின் திட்டங்கள் | செயல்படுத்தும் முகமை | 2022-23ல் மத்திய அரசு விடுவித்த தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | மத்திய துறை திட்டங்கள் | | |
| 1 | தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட உணவு தானியங்கள் கொள்முதலுக்கான உணவு மானியம் | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் | 8,685.95 |
| 2 | பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி | வேளாண்மை துறை | 1,607.44 |
| 3 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | பல்வேறு மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள், தமிழ்நாடு | 124.50 |
| | மத்திய நிதியுதவி திட்டங்கள் | | |
| 1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக உத்தரவாதத் திட்டம் | மாநில வேலைவாய்ப்பு உறுதி நிதி, தமிழ்நாடு | 7,501.29 |
| 2 | ஜல் ஜீவன் திட்டம் (JJM) / தெசிய | தமிழ்நாடு மாநில நீர் மற்றும் | 872.96 |

| வ. எண் | மத்திய அரசின் திட்டங்கள் | செயல்படுத்தும் முகமை | 2022-23ல் மத்திய அரசு விடுவித்த தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ஊரக குடிநீர் திட்டம் | சுகாதார இயக்கம் | |
| 3 | ஆயுஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PMJAY) | தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம் | 579.39 |

(ஆதாரம்: *மாநில நிதிக் கணக்குகள் 2022-23*)

இந்நிதிகள் மாநில வரவு – செலவு திட்டம்/மாநில கருவூல அமைப்பிற்கு விடுவிக்கப்படாததால், இவை பெறப்படுவதும் செலவிடப்படுவதும் வருடாந்திர நிதி கணக்குகளில் சேராது. மேலும், மாநிலத்தின் வரவு செலவுகள் மற்றும் அவற்றிலிருந்து பெறப்பட்ட பிற நிதி மாறுபாடுகள்/அளவுருக்கள் உண்மையான மற்றும் நியாயமான தகவல்களை முழுமையாக காட்டாது.

## ஆ . வெளிப்படைத்தன்மை தொடர்பான பிரச்சினைகள்

### 4.4 தொகு நிதிக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த மின்சார வரி

**மாநில அரசால் TANGEDCOவிடமிருந்து மின்சார வரி பெறப்படாமல் அல்லது குறைவாக பெறப்பட்டிருந்தது மற்றும் TANGEDCOவால் நான்கு வருட காலத்திற்கு தக்கவைத்துக்கொள்ளப்பட்ட தொகை தற்காலிகமாக தவறாக பயன்படுத்தப்படும் அபாயம் நிறைந்ததாக உள்ளது. அரசுக் கணக்கில் நிலுவைத் தொகையை வசூலிக்காதது மாநில அரசின் வருவாய் பற்றாக்குறைக்கு பங்களிக்கும் காரணிகளில் ஒன்றாகும்.**

தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம், 2003ன் பிரிவு 3ன் கீழ், TANGEDCO (சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர்) மின்சார வரியை எரிசக்தி கட்டணங்களுடன் வசூலித்து, வரியை அரசுக் கணக்கில் செலுத்த வேண்டும். 2019-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) நுகர்வோரிடமிருந்து மின்சார வரியாக ₹5,493.40 கோடி வசூலித்ததில், ₹1,228.79 கோடி மட்டுமே செலுத்தியது. 31 மார்ச் 2023 நிலவரப்படி, தொகு நிதியில் செலுத்தப்படாத மின்சார வரி ₹4,264.61 கோடியாக (**அட்டவணை 4.3**) இருந்தது. குறிப்பிட்ட காலமுறையில் வரித் தொகையை செலுத்துவதை தமிழ்நாடு அரசு கட்டாயமாக்கவில்லை மற்றும் சரிகட்டுதல்களும் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. TANGEDCO மூலம் அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை, கடன்களுக்கு எதிரான சரிக்கட்டுதல் ஆகும். 2022-23ஆம் ஆண்டில் ₹1,737.48 கோடி நிலுவைத் தொகை அரசுக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருந்தால், அந்த அளவுக்கு வருவாய்ப் பற்றாக்குறை குறைந்திருக்கும். மேலும், மின்சார வரித் தொகையான ₹4,264.61 கோடியை அரசுக் கணக்குகளுக்குக் கொண்டு வந்திருந்தால், வட்டித் தொகையைக் குறைப்பதன் மூலம் அரசாங்கம் கடனை அந்த அளவுக்குக் குறைத்திருக்கலாம்.

**அட்டவணை 4.3: வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்ட மின்சார வரிகள் பற்றிய விவரங்கள்**

*(₹கோடியில்)*

| ஆண்டு | வசூலிக்கப்பட்ட தொகை | அரசுக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | வரவு வைக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 2019-20 | 1,266.10 | 1,228.79 | 37.31 |
| 2020-21 | 1,102.09 | -- | 1,102.09 |
| 2021-22 | 1,387.73 | -- | 1,387.73 |
| 2022-23 | 1,737.48 | -- | 1,737.48 |
| மொத்தம் | **5,493.40** | **1,228.79** | **4,264.61** |

(ஆதாரம்: *கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை - II)-ஆல் அளிக்கப்பட்ட விவரங்கள்*)

மேலே உள்ள **அட்டவணை 4.3** இருந்து, 2019-23 காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட வரியில் 78 விழுக்காடு அரசுக் கணக்குகளில் வரவு வைக்கப்படாமல் TANGEDCOவிடமே வைக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது. தனது சொந்த செயல்பாட்டு செலவினங்களுக்காக இத்தொகையை செலவழித்திருக்க முடியும் என்ற சாத்தியக்கூறை நிராகரிக்க முடியாது. இவ்வாறு அரசுக் கணக்கில் பணம் செலுத்தாமல் இருப்பதும், வசூலிக்கபட்ட வரியை இவ்வளவு நீண்ட காலத்திற்குத் தக்கவைத்துக்கொள்வது என்பதும் தற்காலிகமாக தவறாக பயன்படுத்தப்படும் அபாயம் நிறைந்ததாக உள்ளது.

நிறைவு கூட்டத்தில், TANGEDCOவிடம் பிரச்சினையை எடுத்துச்செல்வதாக அரசாங்கம் உறுதியளித்தது, முந்தைய அறிக்கைகளிலும் இந்த பிரச்சினை முன்னிலைப்படுத்தப்பட்டாலும், அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 4.5 பயன்பாட்டு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்

தமிழ்நாடு நிதிக்குறியீடு சட்டத்தின் பிரிவு 210(A)ன்படி, மானிய உதவிக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் மாநில கணக்காயரிடம் சமர்பிக்க வேண்டும். இருப்பினும், தமிழ்நாடு நிதிக்குறியீடு, பயன்பாட்டுச் சான்றிதழ்களைச் சமர்பிப்பதற்கான எந்த காலக்கெடுவையும் குறிப்பிடவில்லை. எனவே, அதிகப்பட்சமாக 15 மாதங்கள் காலக்கெடுவை கணக்கில் கொண்டு தணிக்கை ஆய்வை மேற்கொண்டுள்ளது. அதன்படி, மானியம் பெறுபவரால் பெறப்பட்ட உதவித்தொகை தொடர்பான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் (UCs) முந்தைய நிதியாண்டின் மார்ச் வரை பெறப்பட்ட மானியத்திற்காக ஜூன் மாத இறுதிக்குள், மானியம் வழங்குபவர் அதை அனுமதித்த அதிகாரிக்கு வழங்க வேண்டும்.

எனினும், நிதி கணக்குகள் 2022-23ன்படி, ₹1,435.43 கோடி தொகைக்கான 48 பயன்பாட்டு சான்றிதழ்கள் நிலுவையில் உள்ளன என்பது கண்டறியப்பட்டது. நிலுவை குறித்த துறைவாரியான விவரங்கள் **இணைப்பு 4.1**ல் தரப்பட்டுள்ளன. பயன்பாட்டு சான்றிதழ்கள் அளிப்பதில் நிலுவை குறித்த ஆண்டுவாரியான சுருக்கம் **அட்டவணை 4.4**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4.4: நிலுவையிலுள்ள பயன்பாட்டு சான்றிதழ்களின் ஆண்டுவாரியான விவரம்

| ஆண்டு | பயன்பாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | நிலுவை தொகை (₹ கோடியில்) |
|---|---|---|
| 2017-18 | 2 | 16.76 |
| 2018-19 | 2 | 7.95 |
| 2019-20 | 1 | 3.04 |
| 2020-21 | 3 | 18.04 |
| 2021-22 | 18 | 572.31 |
| 2022-23 | 22 | 817.33 |
| **மொத்தம்** | **48** | **1,435.43** |

(ஆதாரம்: *நிதிக் கணக்குகள் மீதான குறிப்புகள்*)

2018-19 ஆம் ஆண்டிற்கு முன் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இரு துறைகள், நகர மற்றும் ஊரமைப்புத்துறை மற்றும் தொழில் மற்றும் வணிகத்துறையை சார்ந்த, மூன்று பயன்பாட்டுச் சான்றிதழ்கள் சோதனை அடிப்படைகளில் ஆராய்ந்தபோது பின்வருவனவற்றைக் கண்டறிந்தது.

➢ சென்னை நகர மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குனர் (DTCP), சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கு (CMWSSB), (பிப்ரவரி 2017) ₹21 கோடியை (2016-17 ஆம் ஆண்டில்) "கழிவுநீர் வெளியேறும் இடங்களை, சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நீர் வழிகளில் விடப்படுவதை தடுக்கும் பணிக்காக" வழங்கியுள்ளது மற்றும் CMWSSB ஆனது ₹8.80 கோடியை மட்டுமே பயன்படுத்தியது, இதற்காக DTCP (மே 2023) PAGக்கு UC சமர்ப்பிக்கப்பட்டது என்பது தணிக்கை கூர்ந்தாய்வில் தெரியவந்துள்ளது. முந்தைய ஒப்பந்தம் நிறுத்தபட்டதற்கு ஒப்பந்தகாரர் காரணமாக இருந்ததனால், மேற்கூறிய பணிகளை முடிப்பதிலும், ₹12.20 கோடிக்கான பயன்பாட்டு சான்றிதழ் சமர்ப்பதிலும் தாமதம் ஏற்பட்டது.

➢ தொழில்கள் மற்றும் வர்த்தகத்துறையிலிருந்து ₹4.56 கோடி மற்றும் ₹1.71 கோடிக்கான இரண்டு யூசிகள் நிலுவையில் இருந்தன.

அ) நிலுவையில் உள்ள ₹4.56 கோடி பயன்பாட்டு சான்றிதழ் தொடர்பாக, தொழில் மற்றும் வணிகத்துறை ₹4.56 கோடியை (2016-17 ஆம் ஆண்டில்) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு (மார்ச் 2017) விருதுநகர் மாவட்டத்தில், தென் மாவட்ட ஜவுளி பதப்படுத்துதல் குழு அமைக்க வழங்கியுள்ளது என்பது தணிக்கை கூர்ந்தாய்வில் தெரியவந்துள்ளது. உள்ளூர் கிராம மக்கள் ஆட்சேபனை தெரிவித்ததால், ஜவுளி பதப்படுத்தும் குழுவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான இடம் மாற்றம் செய்ய எற்பட்டதாலும் மேற்கூறிய பணிகள் முடிக்க கால தாமதம் எற்பட்டதாலும் மானிய தொகையான ₹4.56 கோடிக்கான பயன்பாட்டு சான்றிதழ் சமர்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது,

ஆ) நிலுவையில் உள்ள ₹1.71 கோடிக்கான பயன்பாட்டு சான்றிதழ் தொடர்பாக, தொழில் மற்றும் வர்த்தக இயக்குனரகம் (DIC), சென்னை, மதுரை மாவட்டம், மேலூர் தாலுகாவில் உள்ள மேலவளவு மற்றும் காஞ்சிராயன்பட்டி கிராமத்தில் பொறியியல்

குழு அமைப்பதற்காக ₹3.41 கோடியை (2017-18 ஆம் ஆண்டில்) TANSIDCOவிற்கு மானியமாக (ஏப்ரல் 2017) வழங்கியுள்ளதாக தணிக்கை கூர்ந்தாய்வு தெரிவிக்கிறது. பொறியியல் குழு அமைப்பதற்கு TANSIDCO இதுவரை ₹1.70 கோடியை மட்டுமே பயன்படுத்தியுள்ளன, இதற்கான பயன்பாட்டு சான்றிதழ், தொழில்கள் மற்றும் வணிகத்துறையால் PAG (A&E)க்கு ஜூன் 2023ல் சமர்ப்பிக்கப்பட்டது. கோவிட் 19 நோய்தொற்று சூழ்நிலையில் தொழிலாளர்களை அணி திரட்டுவதிலும் மற்றும் மூலப்பொருட்களைத் திரட்டுவதிலும் தாமதம் ஏற்பட்டதாலும், அதனால் மேற்கூறிய பணிகள் முடிவடைய தாமதம் ஏற்பட்டதாலும், மீதமுள்ள மானிய தொகையான ₹1.71 கோடிக்கான பயன்பாட்டு சான்றிதழ் சமர்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

பயன்பாட்டு சான்றிதழ்கள் சமர்ப்பிக்காதது, பொறுப்புடைமையை உறுதி செய்வதற்கான விதிகளை துறை அலுவலர்கள் பின்பற்ற தவறியதை காட்டுகிறது. நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் மூலதன வகை செலவிற்கான மானிய உதவி தொடர்பானதாக இருந்தால், இப்பொருள் மேலும் முக்கியத்துவம் பெறும். பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நிலுவையில் இருப்பது, நிதியை தவறாகப் பயன்படுத்தும் அபாயம் நிறைந்ததாக இருந்தது. பயன்பாட்டுச் சான்றிதழ்கள் உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதை வலியுறுத்தப்படுவதோடு மட்டுமல்லாமல் உறுதி செய்யப்பட வேண்டும்.

தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டதின் பேரில், பயன்பாட்டுச் சான்றிதழ்ளை நேரடியாக கணக்காய்வுத் தலைவர் (A&E)க்கு சமர்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரசு (நவம்பர் 2023) பதிலளித்தது.

## 4.6 மானிய உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' என வகைப்படுத்தியமை


மாநில அரசு பல்வேறு அமைப்புகளுக்கு உதவி மானியம் வழங்குகின்றது. கணக்குகளின் வெளிப்படைத்தன்மையில் நிதி வழங்கப்பட்ட நிறுவனத்தின் தன்மை மற்றும் அதன் விவரங்களை அளிப்பது முக்கியமானதாகும்.

தமிழ்நாடு அரசின் 2022-23 நிதிக் கணக்குகளின் படி, உதவி மானியம், மாநிலத்தின் மொத்த செலவினத்தில் 24.18 விழுக்காடாக இருந்தது மற்றும் மொத்த உதவி மானியமான ₹79,002.82 கோடியில், உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' என வகைப்படுத்தி, அதாவது உதவி மானியம் பெறும் 'உள்ளாட்சி அமைப்புகள்' தவிர்த்து பல்வேறு அரசு துறைகள் 'மற்றவை' என, ₹62,788.13 கோடி (79.48 விழுக்காடு) விடுவிக்கப்பட்டுள்ளது.

2022-23ன் மொத்த உதவி மானியமான ₹62,788.13 கோடியில், ₹1,895.74 கோடி (2.40 விழுக்காடு) உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' (விரிவான தலைப்பு குறியீடு - 090, என வகைப்படுத்தி துணை–விரிவான தலைப்பு - 009) என காட்டப்பட்டுள்ளது. இது, கணக்குகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் இந்த மானியத்திற்கு வழங்கப்படும் பயனீட்டுச் சான்றிதழ்களை கண்காணிப்பதை வெகுவாக பாதிக்கும். கடந்த

ஐந்தாண்டுகளில், அதாவது 2018-19 முதல் 2022-23 வரை, வழங்கப்பட்ட மொத்த உதவி மானியத்தில் 'மற்றவை' என வகைப்படுத்தி வழங்கப்பட்ட மானியத்தின் விழுக்காடு **விளக்கப்படம் 4.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.2: 'மற்றவை' என வகைப்படுத்தி விடுவிக்கப்பட்ட மானிய உதவி**




(ஆதாரம்: *உரிய ஆண்டிற்கான மாநில நிதிக் கணக்குகள்*)

## 4.7 சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்கள்

பிற மாநிலங்களில் நடைமுறையில் உள்ள, எதிர்பாராசெலவுக்கான சுருக்கப்பட்டி மூலம் நிதியை பெற்று, பின்னர் விரிவான செலவுப்பட்டிகள் மூலம் அதை சரிக்கட்டும் முறையை தமிழ்நாடு அரசு பின்பற்றுவதில்லை. மாறாக, தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு, விதி 99ன் கீழ் தற்காலிக முன்பணங்களை பெற பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது; விரிவான செலவுப்பட்டிகள் மற்றும் செலவு சீட்டுகளை அவர்கள் கூடியவிரைவில் அளித்து முன்பணங்கள் சரிக்கட்டப்பட வேண்டும். துறை அலுவலர்களால் பெறப்பட்ட இத்தகைய தற்காலிக முன்பணங்கள், எடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சரிகட்டப்பட வேண்டும்.

31 மார்ச் 2023 நிலையில், தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு – பகுதி I - விதி 99ன் கீழ் பல்வேறு பணம் பெற்று வழங்கும் அதிகாரிகளால் (DDOs) பெறப்பட்ட ₹296.97 கோடி மதிப்புடைய 693 தற்காலிக முன்பணங்கள் சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்தன என்பது காணப்பட்டது. இதில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்த முன்பணங்கள் ₹14.73 கோடி **(அட்டவணை 4.5**ன் கீழ் வரிசை எண் 1 மற்றும் 2ல் கொடுக்கப்பட்டுள்ளது**)**.

நிலுவையில் உள்ள மொத்த முன்பணங்களில் ₹296.97 கோடி, மாற்றுத் திறனாளிகள் ஆணையர் அலுவலகம் மற்றும் நீதித்துறை ஆகியவை

முறையே ₹66.48 கோடி (22.39 சதவீதம்) மற்றும் ₹53.12 கோடி (17.89 சதவீதம்) நிலுவையில் உள்ளன.

தற்காலிக முன்பணங்கள் சரிக்கட்டப்படாதது பற்றி தொடர்ந்து மாநில நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்களின் எண்ணிக்கை 2021-22ல் 1,649 என்பதிலிருந்து 2022-23ல் 693 ஆக குறைந்தது, அவற்றுக்குரிய தொகை 2021-22ல் ₹317.81 கோடியிலிருந்து 2022-23ல் ₹296.97 கோடி ஆக குறைந்தது.

சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்த முன்பணங்களின் நிலுவைக்கால வாரியான விவரம் **அட்டவணை 4.5**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.5: நிலுவையில் இருந்த முன்பணங்களின் நிலுவைக்கால வாரியான விவரம்**

| வரிசை எண் | நிலுவை | முன்பணங்களின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | பத்து ஆண்டுகளுக்கு மேல் | 5 | 0.99 |
| 2 | ஐந்து ஆண்டுகளுக்கு மேல், பத்து ஆண்டுகளுக்குள் | 7 | 13.74 |
| 3 | ஒரு ஆண்டுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்குள் | 100 | 96.00 |
| 4 | ஒரு ஆண்டுக்குள் | 581 | 186.24 |
| **மொத்தம்** | | **693** | **296.97** |

(ஆதாரம்: *AG (A&E) தொகுத்த விவரங்கள்*)

நிலுவையிலுள்ள கணிசமான முன்பணங்களை, சரிக்கட்டுவது தொடர்பான விதிமுறைகளை முனைப்புடன் அமல்படுத்துவதில், துறை அலுவலர்களின் தரப்பில் இருந்த மெத்தனப்போக்கை சுட்டிக்காட்டுகிறது. இந்நேர்வுகளில், செலவு உரிய ஆண்டின் முடிவிற்குள் செலவு செய்யப்பட்டது என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. முன்பணங்கள் பெறப்பட்டு பின் சரிக்கட்டப்படாதது, பொது நிதியின் விரயம் /கையாடல்/தவறுகள் போன்றவற்றுக்கும் தவறான வழக்கங்களுக்குமான வாய்ப்பை அதிகமாக்குகின்றது. இது சம்பந்தமாக தவறு செய்யும் DDOக்கள் மீது பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும்.

தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டதன் பேரில், நிலுவையில் உள்ள தற்காலிக முன்பணங்களைத் தீர்க்க கருவூலங்கள் மற்றும் கணக்கு ஆணையருக்கு (CTA) தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக அரசு (நவம்பர் 2023) பதிலளித்தது.

## 4.8 தன்வைப்பு கணக்குகள்

தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு குறியீ பிரிவு 269ன்படி, குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தும் பொருட்டு, தன்வைப்பு கணக்குகளை (PD) துவக்கி அவற்றில் தொகைகளை செலுத்த தமிழக அரசுக்கு அதிகாரம் உள்ளது. இக்கணக்குகளை அதிகாரம் பெற்ற அலுவலர்கள் கையாளுகின்ற, மாநில அரசின் உத்தரவுகளின் அடிப்படையில் AG (A&E) தொகுநிதியிலிருந்து பகுதி III - பொது கணக்கின் கீழ் தொடர்புடைய தன்வைப்பு கணக்கிற்கு நிதி மாற்றம் செய்ய அனுமதி வழங்குகிறார். இக்கணக்குகள் அந்த ஆண்டின் இறுதியில் முடிக்கப்பட வேண்டும்.

தன்வைப்பு கணக்கிற்கு மாற்றப்படும் பணம் இறுதிச் செலவாகக் கருதப்பட்டு 8443-00-106-AA தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட இறுதி பெருந்தலைப்புகளின் கீழ் பணம் மாற்றம் செய்யப்படுகின்றன.

2022-23ல் மாநில தொகுநிதியிலிருந்து ₹777.77 கோடி (47 கணக்குகள்) தன்வைப்பு கணக்குகளுக்கு மாற்றப்பட்டது. நிதியாண்டின் இறுதியில் அனைத்து 47 கணக்குகளும் முடிக்கப்பட்டன.

எனினும் 8443-00-106-AA தலைப்பின் ஆரம்பம் மற்றும் இறுதி இருப்பு ₹1,154 கோடியாக காட்டப்பட்டது. இக்கணக்குகள் 2019-20 வருடத்தின் தவறான வகைப்படுத்தலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, இதில் ஐந்து நிர்வாகிகளின் தன்வைப்பு கணக்குகள் தொடர்பான செலவழிக்கப்படாத தொகையை நிதியாண்டின் இறுதியில் சம்பந்தப்பட்ட பெருந்தலைப்புகளின் கீழ் மாற்றப்பட்டது, ஆனால் பற்று தவறாக 8443-00-106-AC என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டது. இந்த தவறான வகைப்பாடு மார்ச் 2023 வரை சரி செய்யப்படவில்லை.

## 4.9 பணமாக்கப்படாத காசோலைகளின் பெருக்கம் மற்றும் மின்னணு இசைவு சேவையிலிருந்து திரும்பப் பெறப்பட்டவை

காசோலைகள் வழங்கப்பட்ட மாதத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அவை பணமாக்கப்படாவிட்டால், அக்காசோலைகள் காலாவதி ஆனது பற்றி பணம் பெறுபவர்களுக்குத் தெரிவித்து, காலாவதியான காசோலைகளைத் திரும்ப ஒப்புவித்து புதிய காசோலைகள் பெற்றுக்கொள்ளுமாறு, சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (PAO) / மாவட்ட கருவூல அதிகாரி (DTO) அறிவுறுத்த வேண்டும் என PAO நடைமுறை நூலின் பத்தி 92(iii) மற்றும் தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பின் விதி 49 குறிப்பிடுகின்றன. இவ்வாறு, காசோலைக்கு எதிராக பணம் வழங்கப்படவில்லை எனில், காசோலையை ரத்து செய்து, சம்பந்தப்பட்ட தலைப்பின் கீழ் செலவினத்தை சரிசெய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ஏழு PAOக்கள் அளித்த, பணமாக்கப்படாத காசோலைகளின் விவரங்களின்படி, ₹60.77 கோடிக்கான 54,246 காசோலைகள் பணமாக்கப்படாமல் (ஜூன் 2023) இருப்பது தெரிய வந்தது. PAOக்களின் பதிவுருக்களின்படி, பணமாக்கப்படாமல் உள்ள காசோலைகளின் மதிப்பு மற்றும் காலவாரியான விவரத் தொகுப்புகளின் சுருக்கம் **அட்டவணை 4.6**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 4.6: பணமாக்கப்படாத காசோலைகளின் விவரங்கள்

(₹ கோடியில்)

| ஆண்டுகளின் எண்ணிக்கையில் காலதாமதம் | நேர்வுகளின் எண்ணிக்கை | காசோலைகளின் மதிப்பு |
|---|---|---|
| 0-5 ஆண்டுகள் | 264 | 1.33 |
| 5-10 ஆண்டுகள் | 399 | 1.09 |
| 10-20 ஆண்டுகள் | 32,249 | 35.47 |
| 20 ஆண்டுகளுக்கு மேல் | 21,334 | 22.88 |
| **மொத்தம்** | **54,246** | **60.77** |

(ஆதாரம்: *PAOக்கள் அளித்த விவரங்கள்*)

நீண்ட நிலுவையிலுள்ள இந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பயனாளிகளுக்கு நேரடி பணப் பரிமாற்றம், சம்பளம் மற்றும் கூலிப் பரிமாற்றம் ஆகிய பணச் செலுத்தங்கள் மின்னணு இசைவு சேவை (ECS) மூலம் செய்யப்படுவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வங்கிக் கணக்கிலுள்ள பணம் பெறுபவரின் விவரங்கள், PAO/கருவூலங்களில் பராமரிக்கப்படும் பணம் பெறுபவரின் விவரங்களுடன் ஒத்துப் போகவில்லை எனில், ECS மூலம் செய்யப்பட்ட பணச் செலுத்தங்கள் PAO/கருவூலத்தில் திரும்பப் பெறப்படுகின்றன. பிப்ரவரி 2018ல், ECS மூலம் செலுத்தப்படும் பணங்களை திரும்பப் பெறுவதற்கான வழிகாட்டு நெறிகளை கணக்குகள் மற்றும் கருவூலங்களின் ஆணையர் வழங்கினார். அந்த வழிகாட்டு நெறிகளின்படி, பயனாளர்கள் கண்டுபிடிக்கப்பட இயலவில்லை எனில், மூன்று மாதங்களுக்கும் மேல் நிலுவையிலுள்ள கோரப்படாத தொகை, அந்தந்த DDOக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட பிறகு, அரசுக் கணக்கிற்கு திரும்பச் செலுத்தப்படவேண்டும். PAOக்களின் பதிவுகளை தணிக்கை செய்ததில், PAO/மதுரையில் 44 ECS செலுத்தல்கள் பதிவாகாத காரணங்களால் மூன்று மாதங்களுக்கும் மேலாக செலுத்த வேண்டிய ₹10.93 லட்சம் (ஆகஸ்ட் 2023) நிலுவையில் இருப்பது தெரியவந்தது. PAO/மதுரையால் திரும்பப் பெற்ற ECS பணச் செலுத்தங்களை நேரடிப் பணப் பரிமாற்றம் (DBT) மூலம் பயனாளிகளுக்கு அவர்களின் வங்கி விவரங்களைச் சரிசெய்து வழங்கவில்லை அல்லது நடப்பில் உள்ள உத்தரவுகளின்படி அரசுக் கணக்கிற்கு திரும்பச் செலுத்தப்படவும் இல்லை. திரும்பப் பெற்ற ECS தொகை ₹3.30 லட்சத்தின் மாதிரியை ஆராய்ந்ததில் திரும்பப் பெற்ற அனைத்து ECS தொகைகளையும் முதலில் டெபிட் செய்யப்பட்ட அந்தந்த தலைப்பில் கிரெடிட் செய்ய IFHRMSல் விதிமுறை இருந்தபோதிலும், முதலில் டெபிட் செய்யப்பட்ட ECS தொகைகளை பெருந்தலைப்பு 8443ல் திரும்பச் செலுத்த கணினி அனுமதிக்கவில்லை. ஆகையால், ECS செலுத்தல்கள் திரும்பப் பெறாததற்கு கணினி சிக்கல்கள் காரணமாக அரசாங்கக் கணக்கில் செலுத்துவதற்கு முடியவில்லை.

## 4.10 சிறுதலைப்பு '800'ன் வரைமுறையற்ற பயன்பாடு

கணக்குகளில் பொருத்தமான கணக்கு தலைப்புகள் கொடுக்கப்படாதபோது மட்டுமே, 800 - பிற செலவுகள்/பிற வரவுகள் என்ற சிறு தலைப்பு பயன்படுத்தப்பட வேண்டும். சிறு தலைப்பு 800ன் தொடர்ச்சியான பயன்பாடு

கணக்குகளின் சரித் தன்மையை பாதிக்கும் என்பதால், அத்தகைய தொடர்ச்சியான பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டும்.

2022-23ம் ஆண்டில், வருவாய் மற்றும் மூலதன பிரிவுகளின் கீழ் '800 - பிற செலவு' என்ற சிறுதலைப்பின் கீழ் ₹36,590.62 கோடி (மொத்த செலவான ₹3,19,494.39 கோடி தொகையில் 11.45 விழுக்காடு) கணக்கு வைக்கப்பட்டது.

13 கணக்கு தலைப்புகளின் சிறு தலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினம், அந்தந்த கணக்கு தலைப்புகளின் மொத்த செலவில் 50 விழுக்காட்டை தாண்டியதாக தணிக்கை கூர்ந்தாய்வில் வெளிவந்தது **இணைப்பு 4.2ல்** விவரிக்கப்பட்டுள்ளது. 13 கணக்கு தலைப்புகளின் சிறு தலைப்பு 800ன் கீழ் ஏழு சிறு தலைப்புகளில் முழுச் செலவும் பதிவு செய்யப்பட்டது.

சோதனை அடிப்படைகளில் சிறு தலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினங்கள் ஆராய்ந்தபோது, அதற்கென்று தனியாக சிறு தலைப்பு இருந்தபோதும் பின்வரும் செலவுகள் பிற செலவினங்களுக்கான சிறு தலைப்பு - 800ல் தவறாக பதிவு செய்யப்பட்டதை **அட்டவணை 4.7**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.7: சிறு தலைப்பு '800 – பிற செலவு' கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினம்**

| வரிசை எண் | செலவின் தன்மை (விரிவான தலைப்பு) | தவறாக பதிவு செய்யப்பட்ட கணக்கு தலைப்பு | | LMMHன் படி பதிவு செய்யப்பட வேண்டிய கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|
| | | கணக்கு தலைப்பு | தொகை (₹ இலட்சத்தில்) | |
| 1 | 110 - மானியங்கள் | 2405-00-800-BG-110 | 1,54.73 | 2405 – மீன்வளம்-00-121-மீனவர்கள் நலத்திட்டங்கள் **(2405-00-121)** |
| 2 | 090 - உதவித்தொகை | 2405-00-800-BE-090 | 13.16 | |
| 3 | 090 - உதவித்தொகை | 2405-00-800-BI-090 | 13.74 | |
| 4 | 090 - உதவித்தொகை | 2405-00-800-BJ-090 | 5.26 | |
| 5 | 110 - மானியங்கள் | 2405-00-800-KD-110 | 6,221.23 | |
| 6 | 120 - படிப்புதவித் மற்றும் பயிற்சி உதவித் | 2405-00-800-KG-120 | 50.00 | |
| 7 | 190 - இயந்திரமும் சாதனமும் | 3456-00-800-AF-190 | 1.22 | 3456-நுகர்பொருள் வழங்கல்-00-102-நுகர்பொருள் வழங்கல் திட்டங்கள் **(3456-00-102)** |
| 8 | 330 - தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் | 3456-00-800-AF-330 | 74.92 | |
| 9 | 710 - அச்சிடும் செலவுகள் | 3456-00-800-AF-710 | 37.05 | |

(ஆதாரம்: *VLC தரவுகள் மற்றும் CGAஆல் வழங்கப்பட்ட LMMH*)

2022-23ம் ஆண்டின் மொத்த வரவுகள் ₹2,43,749.34 கோடி, இதில் ₹9,140.10 கோடி ’800-மற்ற வரவுகளில்' பதிவு செய்யபட்ட மொத்த வரவுத் தொகையில் 3.75 விழுக்காடாக இருந்தது என்று காணப்பட்டது. 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் அல்லது கணிசமான வருவாய்கள், '800' என்ற சிறுதலைப்பின் கீழ் நேர்ந்த நேர்வுகள் இணைப்புகள் **4.3**ல் கூறப்பட்டுள்ளன.

சோதனை அடிப்படைகளில் சிறு தலைப்பு **800**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினங்கள் ஆராய்ந்தபோது

அ) பல வரவுகள் (₹1 கோடிக்கு மேல்) அதற்கென்று தனியாக சிறு தலைப்பு (சிறு தலைப்பு 800) இருந்தபோதும் தவறாக மற்ற வரவுகளின் கீழ் குழுவாக்கப்பட்டதை அட்டவணை **4.8ல்** கொடுக்கபட்டுள்ளன.

**அட்டவணை 4.8: சிறு தலைப்பு '800 - பிறவரவு' கீழ் பதிவு செய்யப்பட்ட வரவு**

| வரிசை எண் | வரவின் தன்மை (விரிவான தலைப்பு) | தவறாக பதிவு செய்யப்பட்ட கணக்கு தலைப்பு | | LMMHன் படி பதிவு செய்யப்பட வேண்டிய கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|
| | | கணக்கு தலைப்பு | தொகை (₹ இலட்சத்தில்) | |
| 1 | 310 – வாடகை வரவு / வாடகை கட்டணங்கள் / குத்தகை வரவுகள் | 0405-00-800-AC-310 | 15,973.20 | 0405 – மீன் வளம் - 00 – 011 – வாடகைகள் "மீன்பிடி உரிமை ஏலம் வாயிலாக பெற்ற வரவுகள் சிறு தலைப்பு 011ல் உள்ளடக்கியது. **(0405-00-011)** |
| 2 | 250 – வட்டி | 0049-04-800-AT-250 | 5,223.43 | 0049 – வட்டி வரவுகள் – வட்டி – 04 – மாநிலத்தின் வரவு – 118 – அரசு ஊழியர்களின் கடன்கள் மீதான வட்டி. "இந்த சிறுதலைப்பின் கீழ் வட்டியுடன் கூடிய முன்பணம் அரசு ஊழியர்களின் கடன்கள் மீதான வட்டி வரவுகளை செலுத்த தனியாக ஒவ்வொரு வகை துணைத் தலைப்பின் கீழ் திறந்து கொள்ளலாம். **(0049-04-118)** |
| 3 | 140 - வரவுகள் | 0029-00-800-AA-140 | 4,007.93 | 0029 - நில வருவாய் – 106 – நில அளவை மற்றும் நில வரி ஏற்பாட்டுப் பணிகள் தொடர்பான வரவுகள் **(0029-00-106)** |
| 4 | 310 – வாடகை வரவு / வாடகை கட்டணங்கள் / குத்தகை வரவுகள் | 0853-00-800-AA-310 | 8,054.14 | 0853 – இரும்பு அல்லாத கனிமப் பொருட்களை வெட்டியெடுத்தல், உலோகத் தொழில்கள் - 00 - 107 - சிறு கனிமச் சலுகைக் கட்டணம், வாடகைகள் மற்றும் ராயல்டிகள் (மணல் சிறு கனிமங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகிறது) |
| 5 | 320 – உரிமைத் தொகை | 0853-00-800-AE-320 | 1,898.40 | |
| 6 | 270 – வரி அல்லாத கட்டணங்கள் | 0853-00-800-AF-270 | 2,754.86 | |
| 7 | 270 - வரி அல்லாத கட்டணங்கள் | 0210-04-800-AM-290 | 3,825.62 | 0210-மருத்துவமும் பொது சுகாதாரமும்–04- பொது சுகாதாரம்–104– கட்டணங்கள் அபராதங்கள் முதலியன. "பொது சுகாதார அதிகாரிகளால் உணரப்பட்ட போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் உணவுக் கலப்படத் |
| 8 | 290 – அபராதங்கள் மற்றும் தண்டணைத் தொகைகள் | 0210-04-800-AN-270 | 587.13 | |

| வரிசை எண் | வரவின் தன்மை (விரிவான தலைப்பு) | தவறாக பதிவு செய்யப்பட்ட கணக்கு தலைப்பு | | LMMHன் படி பதிவு செய்யப்பட வேண்டிய கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|
| | | கணக்கு தலைப்பு | தொகை (₹ இலட்சத்தில்) | |
| | | | | தடுப்புச் சட்டங்களின் கீழ் உரிமக் கட்டணம், அபராதம் போன்றவை **104** சிறு தலைப்பில் அடங்கும்." |
| 9 | 270 - வரி அல்லாத கட்டணங்கள் | 0070-60-800-AB-270 | 822.37 | 0070 – ஏனைய நிருவாகப் பணிகள் – 60 – ஏனைய பணிகள் – 108 – திருமணக் கட்டணம் |
| 10 | 270 - வரி அல்லாத கட்டணங்கள் | 0070-60-800-DM-270 | 328.77 | |

(ஆதாரம்: *VLC தரவுகள் மற்றும் CGAஆல் வழங்கப்பட்ட LMMH*)

ஆ) தற்போதுள்ள விதிகளின்படி, முந்தைய ஆண்டுகள் தொடர்பான மிகையாகக் கொடுத்த தொகையை திருப்ப செலுத்துதல் சம்பந்தப்பட்ட பெருந்தலைப்பின் கீழே '911- மிகையாகக் கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்' என்ற சிறு தலைப்பின் கீழ் பதிவு செய்யப்படும். தணிக்கை ஆய்வில், முந்தைய ஆண்டுகள் தொடர்பான இத்தகைய திருப்பி செலுத்துதல்கள் **அட்டவணை 4.9**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி வருவாய் வரவு தலைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன என்பதும் தெரியவந்தது.

**அட்டவணை 4.9: சிறு தலைப்பு '800 - பிறவரவு' கீழ் பதிவு செய்யப்பட்ட வரவு**

| கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | விரிவான தலைப்பு மற்றும் விவரம் | உப விரிவான தலைப்பு மற்றும் விவரம் | வரவுத்தொகை (₹ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 0070-60-800-MH<br>பல்வேறு துறைகளால் செலுத்தப்படாத நிலுவைத் தொகை | 900 - இதர வருவாய் வரவுகள் | 001 - இதர வரவுகள் | 29,772.16 |
| 0049-04-800-DR<br>ஒருங்கிணைந்த குழ்ந்தைகள் பாதுகாப்புத் திட்ட்தின் வட்டி வரவுகள் | 250 - வட்டி | 062 - செலுத்தப்படாத நிலுவைத் தொகை | 98.58 |
| 0040-04-800-CZ<br>வட்டி வரவுகள் – பட்டு வளர்ச்சித் துறை இயக்க்கம் | 250 - வட்டி | 062 - செலுத்தப்படாத நிலுவைத் தொகை | 50.95 |
| 0049-04-800-DE<br>பொருளியல் மற்றும் புள்ளியியல் ஆணையகத்திடமிருந்து பல்வகை வரவுகள் | 250 - வட்டி | 062 - செலுத்தப்படாத நிலுவைத் தொகை | 5.15 |
| 0851-00-800-AB<br>கைத்தறி மற்றும் துணித் தொழில் | 250 - வட்டி | 062 - செலுத்தப்படாத நிலுவைத் தொகை | 3.08 |
| **மொத்தம்** | | | **29,929.93** |

(ஆதாரம்: *VLC தரவுகள் மற்றும் CGAஆல் வழங்கப்பட்ட LMMH*)

மேற்கூறிய ₹299.30 கோடியில், ₹1.58 கோடி செலவழிக்கப்படாத தொகை மற்றும் வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ள திட்ட நிதியைப் பொறுத்தமட்டில் அதன் மூலம் ஈட்டப்பட்ட வட்டி தொடர்பானது. இந்த வரவுகளின் குறிப்பிட்ட தன்மையை அறிந்திருந்தாலும், இந்த வரவுகள் வருவாய் வரவுகளாக வகைப்படுத்தப்பட்டன.

மேலும், ஜனவரி 2022ல், தமிழக அரசு வங்கிக் கணக்குகளில் வைத்திருக்கும் அனைத்து செலவழிக்கப்படாத நிலுவைகளையும் 0070 -

பிற நிர்வாகச் சேவைகள் என்ற பெருந்தலைப்பின் கீழ் சிறு தலைப்பு 800ல் செலுத்த உத்தரவிட்டது. தெளிவான விவரங்கள் இல்லாமல் பல்வேறு வங்கிக் கணக்குகளில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிதி அவை சம்பந்தப்பட்ட துறைகளின் திட்டங்களை சீரமைக்க இந்த முடிவு எடுக்கப்பட்டது. 2021-22ம் ஆண்டில், இந்த தலைப்பின் கீழ் ₹287.44 கோடி தவறாக வருவாய் வரவாக செலுத்தப்பட்டதை 2021-22ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு மாநில நிதித் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்தத் தொகையின் தவறான கணக்கை சுட்டிக்காட்டிய போதிலும், முந்தைய ஆண்டுகளுக்கான செலவழிக்கப்படாத திட்ட நிதிகள் தொடர்பான மொத்தம் ₹297.72 கோடியை 2022-23ல் '0070-60-800' என்ற தலைப்பின் கீழ் திருப்பி செலுத்தப்பட்டது.

2022-23ம் ஆண்டுக்கான வரி அல்லாத வருவாய்க் கணக்கில் ₹299.30 கோடி முந்தைய ஆண்டுகளின் செலவழிக்கப்படாத தொகை நிலுவைகள் வரியல்லாத வருவாய் தலைப்பில் பதிவுசெய்யப்பட்டதனால் வருவாய்வகை வரவுகள் மிகைப்படுத்திக் காட்டியது.

முந்தைய மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கைகளில் (SFAR) சிறு தலைப்பு 800ன் கீழ் வரவுகள்/செலவுகளின் வகைப்பாடு – பிற வரவுகள்/செலவுகள் தொடர்ச்சியாகப் தெரிவிக்கப்பட்தனால், சிறிய முன்னேற்றம் காணப்பட்டது. சம்பந்தப்பட்ட பெருந்தலைப்பின் கீழ் வரவுகள்/செலவுகளின் கணிசமான விகிதங்கள் சிறு தலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது கவலைக்குரியது, ஏனெனில் இது நிதி அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையை மோசமாக பாதிக்கிறது.

தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட போது, தணிக்கை அவதானிப்புகள் மற்றும் எதிர்காலத்தில் தணிக்கையின் பரிந்துரைகளை கவனமாக பின்பற்றுவதாக அரசு (நவம்பர் 2023) உறுதியளித்தது.

## இ. அளவீடு தொடர்பான பிரச்சினைகள்

### 4.11 அனாமத்து மற்றும் கடன்கள், வைப்புகள் மற்றும் செலுத்தங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் இருந்த மீதங்கள்

நிதி கணக்குகளின் விவர அறிக்கை 21ன் இணைப்பு, அனாமத்து மற்றும் செலுத்தங்கள் என்ற தலைப்புகளின் கீழ் நிகர மீதங்களை காட்டுகிறது. இத்தலைப்புகளில் உள்ள மீதங்கள், பல்வேறு தலைப்புகளின் கீழ் உள்ள பற்று மற்றும் வரவு வகை மீதங்களை தனித்தனியாக கூட்டி, கணக்கிடப்படுகின்றன. மாநில கருவூலங்கள்/பொதுப் பணித்துறை மற்றும் வனத்துறை கோட்டங்கள் போன்றவை அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் அனாமத்து மற்றும் செலுத்தங்கள் கீழுள்ள இனங்கள் சரிக்கட்டப்படும்.

"8658-101-PAO-அனாமத்து" என்ற கணக்கு தலைப்பு AGக்கும் மற்றும் பல்வேறு தனித்தனியான சம்பள மற்றும் கணக்கு அலுவலர்களுக்கும் இடையே நிகழ்ந்த நடவடிக்கைகளை தீர்வு செய்யும் நோக்கத்திற்காக உள்ளது. இவை முக்கியமாக மத்திய அரசு சிவில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாநில அரசு செலுத்தும் பணம் தொடர்பான பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது. இதற்கு அனுமதி / தீர்வு கிடைத்தவுடன், மாநில அரசின் பண இருப்பு அதிகரிக்கும்.

முதலில் AG பதிவுருக்களில் பதியப்படும் இந்த நிதி நடவடிக்கைகள், சம்பள மற்றும் கணக்கு அலுவலர்களிடமிருந்து காசோலைகள்/வரைவோலைகள் பெறப்பட்டவுடனும், அவ்வலுவலர்கள் சார்பாக மாநில கருவூலங்களில் பெறப்படும் தொகைகளுக்கான காசோலை / வரைவோலை வழங்கப்பட்டவுடனும் சரிக்கட்டப்படும். இந்த தலைப்பின் கீழ் நிலுவையில் உள்ள பற்று மீதம் என்றால், சம்பள மற்றும் கணக்கு அலுவலரின் சார்பாக AG மூலம் பணம் செலுத்தப்பட்டது, இன்னும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ₹265.80 கோடி (பற்று) அளவுக்கு செலவழிக்கப்பட்ட தொகை மாநில நிதிகளுக்கு மீள தரப்படாததால், நிலுவையில் உள்ள ரொக்க இருப்பு 31 மார்ச் 2023ல் குறைந்து காணப்படுகிறது.

## 4.12 துறையின் கணக்குகள் ஒத்திசைவு செய்யப்படாமை

துறைகளின் கட்டுப்பாட்டு அலுவலர்கள் செலவு நிதி ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு இருக்கும்படியாக அதன் மீது பயனுள்ள கட்டுப்பாட்டை வைத்திருக்கவும், தமது கணக்குகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்யவும் வேண்டும். தமிழ்நாடு வரவு – செலவு திட்ட நடைமுறை நூல், விதிகள் 124 மற்றும் 127ன்படி, தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் பராமரிக்கும் கணக்குகள், கூட்டு மொத்தம் ஆகியன, AG (A&E)ன் பதிவுருக்களில் உள்ள கணக்குகளுடன் மாதந்தோறும் ஒத்திசைவு செய்யப்பட வேண்டும். மேற்படி நூலின் விதி 128ன்படி, தலைமை கட்டுப்பாட்டு அலுவலர், தனது கணக்குகளிலோ அல்லது AG (A&E)ன் பதிவுருக்களிலோ உரிய மாற்றங்கள் செய்யப்பட்ட பிறகு, ஒரு ஒத்திசைவு சான்றிதழை AG (A&E)க்கு அனுப்ப வேண்டும்.

2022-23 ஆண்டில், தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள், செலவினங்கள் தொடர்பாக 94.79 விழுக்காடும், வரவுகள் தொடர்பாக 93.86 விழுக்காடும் ஒத்திசைவு செய்துள்ளனர். மீதமுள்ள 5.21 சதவீத செலவினங்களும், 6.14 சதவீத வரவுகளும், முறையே 214 தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களுள் 94 மற்றும் 122 தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களுள் 54 ஆகியவற்றால் ஒத்திசைவு செய்யப்படவில்லை. வரவுகள்/செலவுகள் தொடர்பான 122/214 தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களுள் 68/120 அலுவலர்கள் மட்டுமே மேற்படியான ஒத்திசைவை முழுமையாக செய்திருந்தனர் என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் இப்பொருளின் போக்கு குறித்த பகுப்பாய்வு, ஒத்திசைவு செய்யப்படாத நேர்வுகளின் விழுக்காடு உயர்ந்து வருவதை **அட்டவணை 4.10**ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.10: வரவு மற்றும் செலவு பற்றிய கணக்குகளை தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் ஒத்திசைவு செய்யாதது பற்றிய நிலை**

| ஆண்டு | தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | முழுமையாக ஒத்திசைவு செய்த தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | முழுமையாக ஒத்திசைவு செய்யாத தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | ஒத்திசைவு செய்யாமையின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| வரவுகள் | | | | |
| **2018-19** | 119 | 72 | 47 | *39.50* |
| **2019-20** | 121 | 52 | 69 | *57.02* |
| **2020-21** | 121 | 107 | 14 | *11.57* |

| ஆண்டு | தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | முழுமையாக ஒத்திசைவு செய்த தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | முழுமையாக ஒத்திசைவு செய்யாத தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | ஒத்திசைவு செய்யாமையின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| **2021-22** | 126 | 91 | 35 | *27.78* |
| **2022-23** | 122 | 68 | 54 | *44.26* |
| செலவுகள் | | | | |
| **2018-19** | 211 | 152 | 59 | *27.96* |
| **2019-20** | 209 | 105 | 104 | *49.76* |
| **2020-21** | 209 | 175 | 34 | *16.27* |
| **2021-22** | 211 | 151 | 60 | *28.44* |
| **2022-23** | 214 | 120 | 94 | *43.93* |

(ஆதாரம்: *AG (A&E), தமிழ்நாடு தொகுத்த விவரங்கள்*)

மேலும், 2018-19ல் கடன்களை மறுசீரமைப்பு செய்ததில், பல எதிர்மறை மீதங்கள் உருவாயின. மேலும், 2018-19ல் செய்யப்பட்ட கடன்கள் மறுசீரமைப்பு குறித்து கடன் வாங்கிய நிறுவனங்களுக்கு 2022-23ல் தான் தெரியவந்தது என்பதால், அசல் தொகையை மீள செலுத்துதல் மற்றும் வட்டியை செலுத்துதல் ஆகியவை பழைய கடன் தலைப்புகளிலேயே பதியப்பட்டு வந்தது. இதன் விளைவாக, பழைய தலைப்புகளில் அதிகமான வரவுகள் பதிவாகி, புதிய தலைப்புகளில் வரவுகள் ஏதும் பதிவாகவில்லை. எனவே, அசல் தொகையை மீள செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பான நிலுவை விவரங்கள் ஒத்திசைவு செய்யப்பட வேண்டும். விதி தொகுப்புகளில் கூறப்பட்டவை மற்றும் நிர்வாக அறிவுறுத்தல்களை பின்பற்ற தவறுவது, வரவுகள் மற்றும் செலவுகளை தவறான வகைப்படுத்துதல் மற்றும் தவறாக கணக்குவைப்பு என்ற விளைவுகளை உருவாக்குவது மட்டுமன்றி, வரவு–செலவு திட்ட நடைமுறையின் நோக்கத்தையே சிதைக்கும்.

சமரசம் செய்யாததில் கோடல் விதிகள் மற்றும் நிர்வாக வழிமுறைகளை கடைபிடிக்கத் தவறினால், கணக்குகளில் ரசீதுகள் மற்றும் செலவினங்களின் தவறான வகைப்பாடு மற்றும் சரியான முன்பதிவு ஏற்படுவது மட்டுமல்லாமல், பட்ஜெட் செயல்முறையின் நோக்கத்தையும் தோற்கடிக்கிறது.

தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட போது, நிலுவையில் உள்ள ஒத்திசைவை தீர்க்க சமந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக அரசு (நவம்பர் 2023) பதிலளித்தது.

## 4.13 ரொக்க மீதங்கள் குறித்த ஒத்திசைவு

இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934, பிரிவுகள் 20, 21 மற்றும் 21Aன் வழிவகைகளுக்கிணங்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கியாளராக இந்திய ரிசர்வ் வங்கி செயல்படுகிறது. மாநில அரசின் சார்பில் நடைபெறும் நிதி நடவடிக்கைகள், ரிசர்வ் வங்கியின் அலுவலகங்கள் மற்றும் அதன் சார்பில் அரசு நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள முகமை வங்கிகளின் அலுவலகங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநில அரசுகளின் முதன்மை வைப்பு கணக்குகள் நாக்பூரில் உள்ள ரிசர்வ் வங்கியின் மத்திய கணக்குகள் பிரிவில் பராமரிக்கப்படுகின்றன, முகமை வங்கிகள் இணைப்பு அலுவலகங்கள் மூலம் தெரிவிக்கும் மாநில அரசின் நிதி நடவடிக்கைகளை ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலகங்கள் கணக்கு வைத்து மத்திய கணக்குகள் பிரிவுக்கு தெரிவிக்கின்றன.

மாநில அரசின் நிதி நடவடிக்கைகளை கணக்கு வைத்தல் மற்றும் ஒத்திசைவு செய்தல் தொடர்பான ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்களின்படி, முகமை கிளைகள் வரவுகள்/செலுத்தங்களின் பட்டியல்களை நாள் அடிப்படையில் தொடர்புடைய துணை கருவூலம்/ கருவூலத்திற்கு இதற்கென கூறப்பட்ட படிவத்தில் தாமதமின்றி அனுப்ப வேண்டும். மேலும், இணைப்பு வங்கிகள் தயாரிக்கும் முகமை வங்கிகளின் தொகுப்பு மாதாந்திர அறிக்கைகள் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும்; ரிசர்வ் வங்கி அவற்றை மாநில கணக்காயருக்கு அனுப்ப வேண்டும்.

மேற்கூறிய நடைமுறை அமலில் இருக்கையில், பொதுவாக, மாநில கணக்காயரின் பதிவுருக்களின் படியான ரொக்க இருப்பு நிலைக்கும், மத்திய கணக்குகள் பிரிவின் படியான தொகைக்கும் வேறுபாடு எதுவும் இருக்கக்கூடாது. மாதவாரியான இருப்பில் வேறுபாடு இருப்பினும், ஆண்டுதோறும் ஏப்ரல் 25ம் நாள் வாக்கில் ஆண்டு கணக்குகள் முடிக்கப்படும்போது உள்ள ரொக்க இருப்பு நிலைகளில் வேறுபாடு இருக்கக்கூடாது.

எனினும், 2022-23 ஆண்டின் இறுதி இருப்பில், மாநில கணக்காயரின் பதிவுருக்களின் படியான ரொக்க இருப்புக்கும், ரிசர்வ் வங்கி தெரிவித்த ரொக்க இருப்புக்கும் இடையே கணிசமான நிகர வேறுபாடு (₹103.07 கோடி) இருந்தது. ரொக்க இருப்பில் இருந்த வேறுபாடு தொடர்பான விவரங்கள் **அட்டவணை 4.11**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.11: ரொக்க இருப்பில் வேறுபாடுகள்**

| காலம் | பற்று வேறுபாடு | | வரவு வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | இனங்களின் எண்ணிக்கை | ₹ கோடியில் | இனங்களின் எண்ணிக்கை | ₹ கோடியில் |
| 2017-18 வரை | 817 | 4,364.92 | 1,060 | 4,463.81 |
| 2018-19 | 97 | 448.87 | 163 | 865.03 |
| 2019-20 | 69 | 290.31 | 149 | 887.98 |
| 2020-21 | 94 | 1,186.54 | 162 | 548.88 |
| 2021-22 | 101 | 1,502.16 | 91 | 1,188.69 |
| 2022-23 | 183 | 9,069.28 | 188 | 9,010.76 |
| **மொத்தம்** | **1,361** | **16,862.08** | **1,813** | **16,965.15** |

(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகளில் கணக்குகள் மீதான குறிப்புகள்)

கடந்த ஐந்து ஆண்டுகளில் நேர்ந்த நிகழ்வுகள் மீதான பகுப்பாய்வு, ரொக்க இருப்புகளில் உள்ள வேறுபாடுகள் **அட்டவணை 4.12**ல் விளக்கப்பட்டுள்ளவாறு, 2019-20 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் குறைந்திருப்பதை வெளிப்படுத்தியது.

**அட்டவணை 4.12: ரொக்க இருப்புகளில் இருந்த வேறுபாட்டின் போக்கு**

(₹ கோடியில்)

| ஆண்டு | மாநில கணக்காயரின் பதிவுருக்களின்படியான ரொக்க இருப்பு | ரிசர்வ் வங்கி தெரிவித்த ரொக்க இருப்பு | வேறுபாடு |
|---|---|---|---|
| 2016-17 | 305.55 (வ) | 89.53 (வ) | 395.08 (வ) |
| 2017-18 | 81.18 (வ) | 8.12 (வ) | 89.30 (வ) |
| 2018-19 | 459.88 (வ) | 37.49 (வ) | 497.37(வ) |
| 2019-20 | 923.33 (ப) | 2,067.49 (வ) | 1,144.16 (வ) |
| 2020-21 | 467.24 (வ) | 5.70 (வ) | 472.94 (வ) |
| 2021-22 | 266.95 (ப) | 426.56 (வ) | 159.61 (வ) |
| 2022-23 | 59.17 (வ) | 43.90 (வ) | 103.07 (வ) |

*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகளின் விவர அறிக்கை 2) ப: பற்று; வ: வரவு.*

வரவுகளை வங்கிகள் கருவூலங்களுக்கு தெரிவிக்காததே வேறுபாட்டிற்கு முக்கிய காரணமாகும்.

## 4.14 2022-23ம் ஆண்டில் பிந்தைய தணிக்கை பகுப்பாய்வுகளில் சில பரிவர்த்தனைகளின் நிதிக் குறியீடுகள்

நடப்பாண்டில் சில கணக்கு சரிசெய்தல் மற்றும் பிந்தைய தணிக்கை பகுப்பாய்வு காரணமாக, வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை பாதிக்கப்பட்டது என்பது **அட்டவணை 4.13**ல் கொடுக்கப்பட்டுள்ளது. (**அத்தியாயம்-I பத்தி 1.9.1 பார்க்கவும்)**

**அட்டவணை 4.13: குறைவாக/மிகையாக காட்டப்பட்ட வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை**

| விவரங்கள் | வருவாய் பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (₹ கோடியில் ) | | நிதி பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (₹ கோடியில் ) | |
|---|---|---|---|---|
| | மிகையாக காட்டப்பட்டது (-) | குறைவாக காட்டப்பட்டது (+) | மிகையாக காட்டப்பட்டது (-) | குறைவாக காட்டப்பட்டது (+) |
| மூலதன செலவின் திரும்ப பெறுகைகள் தவறுதலாக வருவாய் பிரிவில் சரிகட்டப்பட்டது | -- | (+) 5.74 | -- | -- |
| வட்டியுடன் கூடிய சேம நிதிகள் மற்றும் வைப்புத்தொகைகளுக்கு வட்டி வரவு வைக்கப்படாமை (ஈடு செய் காடு வளர்ப்பு மேலாண்மை நிதியம்) | -- | (+) 3.80 | -- | (+) 3.80 |
| ஆயுள் காப்பீடு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்ட பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்ட நிதியின் வட்டியை அறிவிக்காமை | -- | (+) 298.20 | -- | (+) 298.20 |
| மொத்தம் | -- | **(+) 307.74** | -- | **(+) 302.00** |

*(ஆதாரம்: நிதி கணக்குகளின் மற்றும் பிந்தைய தணிக்கை பகுப்பாய்வு)*

## 4.15 கணக்கு தரங்களுக்கு இணங்குதல்

இந்திய அரசியல் சாசனம் 150வது விதிகளின் படி, இந்திய தணிக்கைத் தலைவரின் (CAG) ஆலோசனைக்கிணங்க இந்திய குடியரசு தலைவர், இந்திய மற்றும் மாநில கணக்குகளின் படிவங்களை பரிந்துரைக்கிறார்.

பொறுப்புடைமை இயந்திரத்தை அதிகரிக்கும் பொருட்டு, அரசு கணக்குகள் மற்றும் நிதி அறிக்கைகளின் தரங்களை உருவாக்குவதற்காக CAG அரசு கணக்குகளின் தர ஆலோசனை வாரியத்தை (GASAB) 2002ல் ஏற்படுத்தினார். CAGன் ஆலோசனைக்கிணங்க குடியரசுத் தலைவர் இது வரை மூன்று இந்திய அரசு கணக்கு தரங்களை (IGAS) அறிவித்தார். 2022-23ம் ஆண்டில் தமிழக அரசு தமது நிதி அறிக்கைகளில் தரங்களுக்கு இணங்காத விவரங்கள் **அட்டவணை 4.14**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.14: கணக்கு தரங்களுக்கு இணங்குதல்**

| வ. எண் | கணக்குத் தரங்கள் | IGASன் சாராம்சம் | மாநில அரசால் இணங்கப்பட்டவை | குறைபாடுகளின் தாக்கம் |
|---|---|---|---|---|
| 1 | IGAS-1: அரசால் வழங்கப்படும் உத்தரவாதங்கள்– வெளிப்படுத்தும் தேவைகள் | நடப்பாண்டில் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் தொகை (வகுப்பு மற்றும் பிரிவு வாரியாக) நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்த இந்த தரத்தின் தேவையாகும். | இணங்கப்பட்டது | -- |
| 2 | IGAS-2: மானிய உதவிகளின் கணக்குகளும் பிரிவுகளும் | சொத்துக்களை உருவாக்க மானிய உதவி வழங்கப்பட்டாலும், அது வருவாய் வகை செலவினமாக வகைப்படுத்தப்பட வேண்டும். மானிய உதவி பொருளாக வழங்கப்பட்டாலும் வெளிப்படுத்த வேண்டும். | இணங்கப்பட்டது | -- |
| 3 | IGAS-3: அரசால் வழங்கப்படும் கடன்களும் முன்பணங்களும் | அரசால் வழங்கப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்களை வெளிப்படுத்துதல் | பகுதியளவு இணங்கப்பட்டது. 2018-19ல் தமிழக அரசு வழங்கிய பழைய கடன்களை மறுசீரமைப்பு செய்தது. மாநில அரசால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் குறித்த அறிக்கை 7 மற்றும் 18, IGAS-3 படி தயாரிக்கப்பட்டாலும், 2022-23லும் கடன்களின் தலைப்புகளின் பதிவான இலக்கங்கள் முடிவுறவில்லை. 2018-19ம் ஆண்டில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களின் மறுசீரமைப்புக்குப் பிறகும் இவை காணப்படுகிறது. எனவே, கடன் பெற்ற நிறுவனங்களின் நிலுவை திருப்பிச் செலுத்தல்கள் குறித்த விவரங்கள் உள்ளடக்கப்படவில்லை. மாநில அரசுடனான ஒத்திசைவு இன்னும் செயல்பாட்டில் உள்ளது. | ஒத்திசைவு செய்யாமையின் காரணமாக எதிர்மறை மீதி உள்ளது. கடன்கள் மற்றும் முன் பணங்களின் வெளிப்படை தேவையை மாநில அரசால் எதிரேற்கப்படவில்லை. |

*(ஆதாரம்: நிதி கணக்குகளில் கணக்குகள் மீதான குறிப்புகள்)*

## ஈ. வெளிப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள்

### 4.16 கணக்குகள் அளிக்கப்படாமை / அளிப்பதில் நேர்ந்த தாமதம்

இந்திய தணிக்கைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணிமுறைமைகள்) சட்டம், 1971, பிரிவுகள் 14 மற்றும் 15ன்படி, அரசின் நிதியுதவியை பெறும் நிறுவனங்களின் கணக்குகள், பெறப்பட்ட உதவியின் அளவு போன்றவை தொடர்பாக கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தணிக்கை செய்யப்பட வேண்டும். அச்சட்டத்தின் கீழ் தணிக்கை செய்யப்படுவதற்கு தகுதி பெறும் நிறுவனங்களை கண்டறியும் பொருட்டு, பல்வேறு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவி, அதன் நோக்கம், அந்நிறுவனங்களின் மொத்த செலவு ஆகிய விவரங்களை துறைத்தலைவர்கள் ஆண்டுதோறும் தணிக்கைக்கு அளிக்க வேண்டும்.

ஆகஸ்ட் 2023 நிலையில், 219 நிறுவனங்கள்/அமைப்புகளின் 2022-23 வரையிலான ஆண்டு கணக்குகளை அவற்றுக்கு நிதியுதவியை விடுவித்த துறைத்தலைவர்கள் தணிக்கைக்கு அளிக்கவில்லை. நிலுவை விவரங்கள் **இணைப்பு 4.4**ல் தரப்பட்டு, நிலுவைக்காலம் பற்றிய விவரங்கள் **அட்டவணை 4.15**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.15: நிறுவனங்கள்/ஆணைக் குழுக்கள் ஆண்டு கணக்குகளை அளிப்பதில் நிலுவை**

| வ. எண் | காலதாமதம் (ஆண்டுகள்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓராண்டு வரை | 86 |
| 2 | ஓராண்டிற்கு மேல் மூன்றாண்டுகள் வரை | 88 |
| 3 | மூன்றாண்டுகளுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை | 20 |
| 4 | ஐந்தாண்டுகளுக்கு மேல் | 25 |
| | **மொத்தம்** | **219** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த விவரங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)*

சம்பளம், பராமரிப்பு போன்றவற்றிற்காக அரசின் நிதியுதவியை பெறும் கல்வி நிறுவனங்களே ஆண்டு கணக்குகளை அளிக்காத நிறுவனங்களுள் முக்கியமானவை. கணக்குகளை அளிக்காமை என்பது, நிதியுதவி அது அளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது என தணிக்கை தரப்பு சட்டமன்றத்திற்கு உறுதி அளிக்க தடையாக இருக்கும்.

### 4.17 தமிழ்நாடு சட்ட மாநில ஆணையத்தின் தனி தணிக்கை அறிக்கையை மாநில சட்டமன்றத்தில் வைப்பதில் நிலுவை நிலை

சட்ட சேவைகள் ஆணையச் சட்டம் 1987 இன் பிரிவு 18ன் துணைப் பிரிவுகள் 2, 4 மற்றும் 5ன் படி, சட்டப்பூர்வ மாநில அதிகாரிகளின் கணக்குகள் இந்திய தணிக்கைத் தலைவரின் (CAG) மூலம் குறிப்பிட்ட கால இடைவெளியில் தணிக்கை செய்யப்பட வேண்டும். மற்றும் மாநில சட்ட அதிகாரிகளின் கணக்குகள், CAGஆல் சான்றளிக்கப்பட்ட கணக்குகள் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிற நபர்களால் சான்றளிக்கப்பட்ட கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து மாநில அரசுக்கு ஆண்டுதோறும் அனுப்பப்படும். மாநில அரசு கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கையை, அவை கிடைத்தவுடன் கூடிய விரைவில், மாநில சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டும். இருப்பினும், தமிழ்நாடு மாநில

சட்டப் சேவை ஆணையம் மற்றும் மாநிலத்தில் உள்ள 32 மாவட்ட சட்டப் சேவை ஆணையங்களின் தனித் தணிக்கை அறிக்கைகள் **இணைப்பு 4.5**ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில் மாநில சட்டமன்றத்தில் வைக்கப்படவில்லை என்பது தணிக்கை மூலம் கவனிக்கப்பட்டது.

## 4.18 கையாடல்கள், இழப்புகள் மற்றும் களவுகள்

தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு, பிரிவு 294ன்படி, பொது பணம், பண்டங்கள், பிற அசையும் அல்லது அசையா சொத்துக்கள் ஆகியவற்றின் கையாடல் அல்லது இழப்புகள் தொடர்பான அனைத்து நேர்வுகளையும் அலுவலக தலைவர்கள் AG(A&E)க்கு தெரிவிக்க வேண்டும். மேலும், இழப்புகளுக்கான பொறுப்புடைமையை செயல்படுத்துதல் மற்றும் இத்தகைய நேர்வுகளை தீர்வு செய்தல் ஆகியவற்றிற்கான கோட்பாடுகளையும் வழிமுறைகளையும் அந்த விதித்தொகுப்பு வகுத்துள்ளது.

மார்ச் 31, 2023 நிலையில், மொத்தம் ₹30.81 கோடி மதிப்புள்ள கையாடல், குறைவு, மற்றும் களவு தொடர்பான 393 நேர்வுகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன. நிலுவையிலுள்ள நேர்வுகளின் விவரங்கள் மற்றும் இவற்றின் துறைவாரியான விவரங்கள் **இணைப்பு 4.6**ல் தரப்பட்டுள்ளன. நிலுவை இனங்களின் நிலுவைக் காலம் பற்றிய விவரங்கள் மற்றும் நிலுவைக்கான காரணங்கள் முறையே **அட்டவணை 4.16** மற்றும் **அட்டவணை 4.17**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.16: நிலுவை இனங்களின் நிலுவைக் காலம்**

| நிலுவைக் காலம் (ஆண்டுகள்) | நேர்வுகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பு * (₹ கோடியில்) |
|---|---|---|
| 0 - 5 | 43 | 2.95 |
| 6-10 | 15 | 9.44 |
| 11-15 | 32 | 4.87 |
| 16 - 20 | 31 | 3.42 |
| 21 மற்றும் அதற்கு மேலும் | 272 | 10.13 |
| **மொத்தம்** | **393** | **30.81** |

* 2022-23ல் கிடைத்த தகவலின் அடிப்படையில், கடந்த ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட எண்ணிக்கையும் தொகையும் மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த விவரங்கள் மற்றும் AG (A&E))*

**அட்டவணை 4.17: நிலுவைக்கான காரணங்கள்**

| நிலுவைக்கான காரணம் | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|
| துறை சார்ந்த மற்றும் குற்றவியல் புலனாய்வு நடத்தப்படவில்லை | 161 | 13.54 |
| தொடங்கப்பட்ட துறை சார்ந்த நடவடிக்கை நிறைவுறவில்லை | 112 | 4.97 |
| குற்றவியல் நடவடிக்கைகள் முடிவுற்றாலும் தொகை மீள பெறப்படவில்லை | 12 | 0.76 |
| தொகையை மீள பெறுவதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கான ஆணை | 76 | 3.74 |

| நிலுவைக்கான காரணம் | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|
| பெறப்படவில்லை | | |
| நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளவை | 32 | 7.80 |
| **மொத்தம்** | **393** | **30.81** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த விவரங்கள் மற்றும் AG (A&E))*

393 வழக்குகளில், கருவூலங்கள் மற்றும் கணக்கு ஆணையர் (CTA) தொடர்பான ₹15.77 கோடி மதிப்புள்ள 39 வழக்குகள் CTA இன் ஆய்வின் போது PAG (A&E) அலுவலகத்தால் கவனிக்கப்பட்டன. 39 வழக்குகளில், ₹4.74 கோடி மதிப்புள்ள 24 வழக்குகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன, அவை அனைத்தும் ராணுவ ஓய்வூதியம், டிசிஆர்ஜி, போலி பில்கள், இசிஎஸ் ரிட்டர்ன் தொகை போன்றவற்றில் அரசுப் பணத்தை தவறாகப் பயன்படுத்தியது தொடர்பானவை. பணமதிப்பு நீக்கம் அல்லது பொதுப் பணம், கடைகள் அல்லது பிற அசையும் அல்லது அசையாச் சொத்துக்கள் இழப்பு தொடர்பான வழக்குகள் மாநில கணக்காயரிடம் தலைமை அதிகாரியால் தெரிவிக்கப்பட வேண்டும், கருவூலம் மற்றும் கணக்கு ஆணையர் அலுவலகம் மேற்கண்ட வழக்குகளை மாநில கணக்காயரிடம் தெரிவிக்கவில்லை, இது துறையின் தோல்வியைக் குறிக்கிறது. மேலும், முறைகேடுகளில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் இருந்து வசூலிப்பதில் CTA அலுவலகம் எடுத்த உறுதியான நடவடிக்கை தணிக்கைக்கு தெரிவிக்கப்படவில்லை.

## 4.19 மாநில நிதிநிலை தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

பொது கணக்குகள் குழு 2013-14 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் மாநில நிதி நிலை மீதான தணிக்கை அறிக்கைகளை விவாதிக்க 15 முறை கூடியது. செப்டம்பர் 2023 நிலையில், 2008-09 முதல் 2021-22 வரையிலான ஆண்டுகளுக்குரிய தணிக்கை அறிக்கைகளிலிருந்து விவாதிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 207 பத்திகள்/சீராய்வுகளுள் 22 பத்திகள்/சீராய்வுகள் விவாதிக்கப்பட்டன மற்றும் 185 பத்திகள்/சீராய்வுகள் நிலுவையில் இருந்தன.

## 4.20 முடிவுரை

பயன்பாட்டு சான்றிதழ்களை (₹1,435.43 கோடி) அளிக்காதிருப்பது, பொறுப்புடைமையை உறுதி செய்யும் விதிகளை பின்பற்ற துறை அலுவலர்கள் தவறியதை காட்டுவது மட்டுமல்லாமல், மானிய உதவி வழங்கிய நோக்கத்தை சிதைப்பதாகவும் உள்ளது. நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் மூலதன வகை செலவிற்கான மானிய உதவி தொடர்பானதாக இருந்தால், இப்பொருள் மேலும் முக்கியத்துவம் பெறும்.

**(பத்தி 4.5)**

கணிசமான தொகை கொண்ட சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்கள் (₹296.97 கோடி பெறப்பட்டு பல ஆண்டுகளாக நிலுவையில் இருப்பது), முன்பணங்களை சரிக்கட்டுவது தொடர்பான விதிமுறைகளை

அமல்படுத்துவதில் துறை அலுவலர்களின் தரப்பில் இருந்த மெத்தனப்போக்கை காட்டியது.

**(பத்தி 4.7)**

பல ரசீதுகள் மற்றும் செலவுகள் அதற்கென்று தனியாக கணக்கு தலைப்புகளின் கீழ் சிறு தலைப்பு இருந்தபோதும் சிறு தலைப்பு 800ன் கீழ் தவறாக பதிவு செய்யப்பட்டன.
கடந்த ஆண்டுகளின் செலவழிக்கப்படாத நிலுவைத் தொகைகள் மற்றும் இந்த நிலுவைகளில் பெறப்பட்ட வட்டி ஆகியவை சிறு தலைப்பு "911- மிகையாகக் கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்" என்ற தலைப்பின் கீழ் முன்பதிவு செய்வதற்குப் பதிலாக வரி அல்லாத ரசீதுத் தலைப்பின் கீழ் (சிறு தலைப்பு 800) பதிவு செய்யப்பட்டன.

**(பத்தி 4.10)**

மார்ச் 2023 நிலவரப்படி, பொதுத்துறை நிறுவனங்கள் / அமைப்புகள் / அதிகாரிகள் தொடர்பான 219 கணக்குகள் இறுதி செய்யப்படுவதற்கு நிலுவையில் உள்ளன.

**(பத்தி 4.16)**

கையாடல், இழப்பு, மற்றும் களவு நேர்வுகள், முதன்மை மாநில கணக்காயரின் கவனத்திற்குக் நடந்தபோது கொண்டு வரப்படவில்லை மற்றும் அதற்கான தீர்வு நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது.

**(பத்தி 4.18)**

## 4.21 பரிந்துரைகள்

- *கட்டுப்பாட்டு அலுவலர்கள் தற்காலிக முன்பணங்களைச் சரிசெய்து, உரிய நேரத்தில் பயன்பாட்டுச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதையும், அவ்வாறு செய்யத் தவறியவர்கள் மீது பொறுப்பை நிர்ணயிப்பதையும் அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.*
- *DDOs/PAOக்களுக்கு ஏற்கனவே உள்ள பொருத்தமான சிறு தலைப்புகளின் கீழ் வரவுகள் மற்றும் செலவினங்களை சிறு தலைப்பு 800ல் பதிவு செய்யும்படி அரசு அறிவுறுத்த வேண்டும்.* "911- மிகையாகக் கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்" *கீழ் முந்தைய ஆண்டுகளின் செலவழிக்கப்படாத நிலுவைகளை பதிவு செய்ய வேண்டும்.*
- *நிலுவையில் உள்ள கணக்குகளுக்கு சம்பந்தப்பட்ட தலைமை நிர்வாக அதிகாரிகள் மீது பொறுப்பை அரசு நிர்ணயிக்க வேண்டும்.*
- *பொதுப் பணம், கடைகள் அல்லது பிற அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை பணமதிப்பு நீக்கம் அல்லது இழப்பு போன்ற அனைத்து வழக்குகளையும் மாநில கணக்காயரிடம் புகாரளிக்க அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் அரசு அறிவுறுத்த வேண்டும்.*